# சிலுவைப்பாதை

## முன்னுரை

சிலுவைப்பாதை தவக்காலத்தில் நாம் மேற்கொள்ளவேண்டிய சடங்கோ, சம்பிரதாயமோ அல்ல, மாறாக இது நம் ஆண்டவர் சுமந்து சென்ற தெய்வீகப்பாதை, இது ஓர் அன்பின் பாதை, இயேசுவின் மீட்புப்பணியின் இறுதி ஊர்வலம்தான் இந்த சிலுவைப்பாதை. இயேசுவின் சீடர்களாகிய நாம் பின்பற்ற வேண்டிய வாழ்க்கைப்பாதை. இயேசுவின் பாடுகளை நினைத்து அழுவதற்கோ, வருத்தப்படுவதற்கோ இச்சிலுவைப்பாதை நம்மை அழைக்கவில்லை மாறாக, இயேசு நம்மீது கொண்டிருந்த அன்பை உணர்ந்து கொள்வதற்கு, நம் பாவத்தை உற்று நோக்குவதற்கு, நம் பலவீனங்களை பழுது பார்த்து புதிய வாழ்வு வாழ, கல்வாரியை நோக்கிப் பயணிக்கும் இயேசு நம்மை அழைக்கின்றார்.

துவக்க செபம்

இயேசுவே ! நீர் இறந்த புனிதவெள்ளியான இன்று, உம்முடைய பாடுகளில் பங்கெடுத்து – உம் அன்பை அனுபவித்து வாழ்வு பெற விரும்புகின்றோம். பாவிகளாகிய எங்களை மனமாற்றும் - ஆமென்

பாடல்................

### 1ம் ஸ்தலம்

**இயேசு தீர்ப்பிடப்படுகின்றார்.**

தீர்ப்பிடாதீர்கள்… தீர்ப்புக்குள்ளாவீர்கள் என்று மொழிந்த இயேசுவே! அநியாயமாகத் தீரப்பிடப்படுகின்றார். அனைவராலும் கைவிடப்பட்ட நிலையில், பிலாத்துமுன் தீர்ப்புக்காய் நிறுத்தப்படுகின்றார், நீதிமான் இயேசு. நீதிமான் என்று தெரிந்தும் சிலுவையில் அறையும்படி கையளிக்கின்றான் பிலாத்து.

நாமும் அன்றாட வாழ்வில் எத்தனையோ பேரை அநியாயமாகத் தீர்ப்பிடுகின்றோம்… பிறரை தவறாகப் பேசுகின்றோம், பிறருடைய நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கின்றோம். அநியாயங்களை அக்கிரமங்களைக் கண்டும் காணாதவர் போல சென்றுகொண்டிருக்கின்றோம். பிறருக்கு நல்லது செய்யாவிட்டாலும், கெடுதல் நினைக்காமல், கெடுதல் செய்யாமல் இருக்க, இயேசு நம்மை அழைக்கின்றார்.

**செபம்**

நீதிமானாகிய இயேசுவே! பிறரை அநியாயமாகத் தீர்ப்பிட்டதற்காக மனம் வருந்துகின்றோம். எங்களை மன்னியும். உண்மையைப் பேசி, நீதியை நிலை நாட்ட, எங்களுக்கு உமது அருளைத்தாரும்.ஆமென்.

## 2ம் ஸ்தலம்

## இயேசு சிலுவை சுமக்கிறார்.

"சுமைசுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், உங்களை நான் இளைப்பாற்றுவேன்" என்று கூறிய இயேசுவின் கழுத்தில் பாரமான சிலுவை சுமத்தப்படுகின்றது. சிலுவை வழிதான் என்மக்களுக்கு வாழ்வு என்றால், அதை ஏற்கத் தயார் என்று சொல்லி சிலுவை மரத்தை இன்முகத்துடன் ஏற்கின்றார் இயேசு.

நாமும் நமது அன்றாட வாழ்வில் பல சிலுவைகளை சுமத்துகின்றோம். நீதிமான்களை, தவறு செய்யாதவர்களை, ஏழை எளியவர்களை அநியாயமாகத் தண்டிக்கின்றோம். நம்வாழ்வில் வரும் கஸ்டங்களையெல்லாம் பிறருக்குக் கொடுத்துவிட்டு, நிம்மதியாக வாழ முயற்சிக்கின்றோம். ஏன் பலருக்கு நாமே சிலுவைகளாக இருந்து வருகின்றோம். நம் வாழ்வில் வரும் சிலுவைகளை உதறித் தள்ளுகின்றோம். அதனால் பிறர் துன்புறுவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றோம். இந்த நமது தவறுகளுக்காக மனம் வருந்துவோம். இயேசுவிடத்திலும் பிறரிடத்திலும் மன்னிப்புக் கேட்போம்.

### செபம்

எம்மை மீட்க சிலுவை சுமந்த இயேசுவே! எம் வாழ்வில் வரும் சிலுவைகளை ஏற்றுக் கொள்ளவும், பிறருக்கு ஒருபோதும் சிலுவைகளாய் இராமல் இருக்கவும் அருள் தாரும். ஆமென்

## 3ம் ஸ்தலம்

## இயேசு முதன்முறையாக கீழே விழுகிறார்.

பார்வையற்றவர்களை பார்க்க வைத்தவர் இயேசு, இறந்தவர்களை உயிர்ப்பித்தவர் இயேசு, இதோ... சிலுவை சுமக்க முடியாமல் கீழே விழுகிறார். விழுந்த இயேசு விழுந்தே கிடக்கவில்லை. எழுந்து தனது இலக்கு நோக்கி பயணத்தை தொடர்கிறார்.

நம்முடைய அனுதின வாழ்வில், எத்தனையோ, தடங்கல்களை, இடைஞ்சல்களை சந்திக்கிறோம்... நம்முடைய பல முயற்சிகள் தோல்வியில் முடியும்போது, விரக்தி அடைகிறோம்... முயற்சியைக் கைவிடுகிறோம், விசுவாசத்தை இழக்கிறோம். அதே சமயத்தில் பிறருடைய வளர்ச்சிக்கு, நாம் தடைக்கல்லாக இருந்து வந்திருக்கின்றோம். ‘‘என்னால் வாழமுடியவில்லையென்றால், பிறரும் வாழக்கூடாது’’ என்கின்ற எண்ணத்தோடு வாழ்ந்து கொண்டிருப்பதை எண்ணி வருந்தி, இயேசுவிடத்திலும், பிறரிடத்திலும் மன்னிப்புக் கேட்போம்.

**செபம்**

தடைக்கற்களை படிக்கற்களாகிய இயேசுவே! பாவங்களில் விழுந்து கிடக்கின்ற எங்களை கண்நோக்கும்... எழுந்து நடந்து நீர் வாக்களித்த வாழ்வை பெற்றுக் கொள்ள உமது அருளை எங்கள் அனைவருக்கும் தாரும்.ஆமென்.

## 4ம் ஸ்தலம்

## இயேசு தன் அன்புத்தாயைச் சந்திக்கிறார்.

தன் மகன் இறைபணியில் முழுமையாக தன்னை கரைத்துக் கொண்டதை பார்த்து மகிழ்ந்த தாய், இதோ......குற்றவாளியாய் அடித்து, இழுத்து செல்லப்படுவதை பார்த்து, எவ்வளவோ வேதனை அனுபவித்திருப்பாள். ‘‘உன் உள்ளத்தை ஓர் வாள் ஊருடுவும்’’ என்கின்ற இறைவாக்கினர் சீமோனுடைய வார்த்தைகளை நினைவு கூருகிறாள். தன் வாழ்வைப்பற்றி கொஞ்சம் கூட நினையாது, தன் பாசமுள்ள பார்வையால் ஆறுதல் கூறி, கல்வாரிப் பயணத்திலே தன் மகனோடு உடன் நடக்கின்றாள் இயேசுவின் தாய் மரியாள்.

இன்றைய சூழலில் பெற்றோர்களாகிய நாம், நம் பிள்ளைகளை எப்படி வளர்க்கிறோம்? எல்லாவற்றையும் செய்து கொடுக்கின்ற நாம், விசுவாசத்தில் வளர உதவி இருக்கிறோமா? எடுத்துக் காட்டுகளாக வாழுந்து கொண்டிருக்கிறோமா? பொது சேவை, பிறர் நலன் போன்றவைகளில் பிள்ளைகள் ஆர்வம் காட்டியபோது, உற்சாகப்படுத்தியிருக்கிறோமா? நற்செய்தி மதிப்பீடுகளின்படி வாழ உதவி இருக்கிறோமா? அவர்கள் தங்கள் இலட்சியங்களை அடைய உறுதுணையாக இருந்திருக்கிறோமா? வேலை, பணம், வசதி என்று எப்போதும் நேரத்தைச் செலவிடுகிற நாம், நம் பிள்ளைகளின் வெற்றியில், தோல்வியில் உடன் இருந்திருக்கின்றோமா? பங்கெடுத்திருக்கிறோமா? சிந்திப்போம்.

**செபம்**

கடவுள் தந்த ஒரு பிள்ளையையும் எம் மீட்புக்காய் அர்ப்பணித்த தாயே, உம்மை எம் வாழ்வில் பின்பற்றி வாழ, இறையருளை எமக்கு பெற்றுத் தாரும்.ஆமென்.

## 5ம் ஸ்தலம்

## சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் இயேசுவுக்கு உதவுகின்றார்.

பாரமான சிலுவையை தூக்கிக் கொண்டு கல்வாரி நோக்கி நடக்க, இயேசு மிகவும் கஸ்ரப்படுகிறார். எல்லோராலும் கைவிடப்பட்ட வேதனை... தலையின் மேல் இருந்த முள்முடி தந்த வேதனை... சாட்டை அடியினால் உடலில் உருவான காயங்கள் தரும் வேதனை... உடலில் சோர்வும், கால்களில் தளர்ச்சியும் ஏற்பட்டு, தள்ளாடி, தடுமாறி செல்கையில், எங்கே வழியிலேயே இறந்து விடப் போகிறார் என்கிற பயத்தில் , அவ்வழியே வந்த சீமோனை சிலுவை சுமக்கச் சொல்கின்றனர் படைவீரர்கள். எந்தவித மறுப்புமின்றி இயேசுவுக்காக உதவுவதில் மகிழ்ச்சி கொண்டு, சிலுவையை சுமந்து செல்கின்றார் சீமோன்.

நாம் நமது அன்றாட வாழ்வில் , பாரமான சிலுவைகளைச் சுமந்து வாழும் எண்ணற்ற மக்களைப் பார்க்கின்றோம். பசியால், பட்டிணியால், குடும்ப பிரச்சனைகளினால், தனிமையால், நோயால், வேலையின்மையினால் கஸரப்படும் எத்தனையோ சகோதர, சகோதரிகளை, குடும்பங்களை காண்கிறோம். கண்டும் காணாதவர்போல் சென்றுகொண்டிருக்கின்றோம். ஒருசில நேரங்களில் ஏளனமாகவும் பார்த்து சந்தோசம் அடைந்திருக்கின்றோம். பிறர் நலம் பேணாது, பிறருக்கு உதவாது, சுயநலவாதிகளாய் வாழ்ந்து வருவதை எண்ணி வருந்துவோம், மன்னிப்புக் கேட்போம்.

**செபம்**

இரக்கமும் கருணையும் உருவான இயேசுவே!! சுயநலவாதியாய் இராது, பிறருடைய துன்ப துயரங்களில் பங்கெடுத்து, பிறரையும் வாழவைக்கின்ற நல்ல மனதை எங்கள் அனைவருக்கும் தாரும்.ஆமென்.

## 6ம் ஸ்தலம்

## வெரோணிக்கம்மாள் இயேசுவின் முகத்தைத் துடைக்கின்றாள்

இயேசுவின் முகம் காறி துப்பப்பட்டு, முள்முடி அழுத்தியதால் இரத்தம் கசிந்து, நீண்ட தூரப்பயணத்தால் வேர்வையும், புழுதியும் இயேசுவின் முகத்தை மாற்ற, இயேசு இறைச் சாயலையும் மனித சாயலையும் இழந்து நிற்கின்றார். யாரும் அவருக்கு உதவி செய்ய முன்வரவில்லை. ஆனால் வெரோணிக்கா என்னும் பெண், சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் மீறிச் சென்று, இயேசுவின் திருமுகத்தைத் துடைக்கிறாள். அவளது இரக்கத்திற்கும் வீரத்திற்கும் இயேசு கொடுத்த பரிசு – அவரது திருமுகத்தை துணியில் பதிக்கின்றார். வெரோணிக்காவின் இரக்கச் செயல் இயேசுவுக்கு ஆறுதலையும் தெம்பையும் தந்து பயணத்தைத் தொடர உதவியது.

அன்புச் சகோதரமே.. நம்முடைய அன்றாட வாழ்க்கையில் எத்தனையோபேர் வாழ்க்கையில் விரக்தியடைந்து, சோர்வுற்று, சோகத்தில் ஆழ்ந்து, கண்ணீர் வடித்ததைப் பார்த்திருக்கின்றோம். நம்முடைய ஆறுதலான வார்த்தை, நம்முடைய உதவி பிறருக்கு அவசியம் தேவைப்படுகிறது என்று உணர்ந்தும், கல்மனத்தவராய், பிறரைப்பற்றி எள்ளளவும் கவலைப்படாமல் வாழ்ந்து வந்திருகின்றோம். பலநேரங்களில் ‘‘எனக்கு ஏன் இந்த வீண்வம்பு’’ என்று கண்டும் காணாதவராய் நம்வழி நடந்திருக்கின்றோம். இத்தகைய கண்டு கொள்ளாமை, நாம் பிறருக்குத் தரும் கொடிய தடைகளாக இருக்கிறது என்பதை, இப்பொழுதாவது உணர்வோம்.

**செபம்**

எம்தேவையை அறிந்து எப்பொழுதும் எமக்கு உதவும் இரக்கமுள்ள இயேசுவே! வெரோணிக்கம்மாளைப் போன்று, தேவையில் இருக்கும் எம் சகோதர சகோதரரின் துயர் துடைத்து, எமக்கு உமது அருளை தாரும்.ஆமென்.

## 7ம் ஸ்தலம்

## இரண்டாம் முறையாக இயேசு தரையில் விழுகிறார்.

பாரமான சிலுவையை சுமந்து கொண்டு செல்லும் இயேசு களைப்படைகிறார். கல்வாரி செல்லும் பாதை கரடு முரடானது என்பதால், கல்தடக்கி கிழே விழுகின்றார். இயேசு சுமந்தது சிலுவையின் பாரத்தை மட்டும் அல்ல, நம் பாவச் சுமையையும் சேர்த்துத்தான். உடல் சோர்வோடு கூட சேர்த்து, மனச் சோர்வும் இயேசுவுக்கு நிச்சயம் இருந்திருக்கும். விழுந்தே கிடக்கவில்லை எழுகின்றார். சிலுவையை சரி செய்து கொண்டு கல்வாரி நோக்கி நடக்கின்றார்.

நாமும் நம்முடைய அன்றாட வாழ்வில், நற்செய்தியின் மதிப்பீடுகளின் படி வாழ விரும்புகிறோம். நல்ல கிறீஸ்தவர்களாக வாழ ஆசிக்கின்றோம். பலவற்றை சாதிக்கவேண்டும் என்று பல முயற்சிகளை மேற் கொள்கிறோம். இந்த நம் ஆசைகள், விருப்பங்கள் பல நேரங்களில் நிறைவேறாமலே இருந்து விடுகின்றன. காரணம் பலதடைகள், பலஎதிர்ப்புக்கள், பலவகையான விமர்சனங்கள்! இலக்கையே மறக்கின்றோம். முயற்சிகளை அறவே கைவிட்டுவிட்டு குறுக்கு வழியே, தவறான பாதைகளை பின்பற்றுகிறோம். அவற்றை விடுத்து நம் மீட்பர் இயேசுவை நம் வாழ்வுக்கு மாதிரிகைகளாக கொண்டுவாழ முயல்வோம்.

**செபம்**

பாரமான சிலுவையை எங்களுக்காக சுமந்த இயேசுவே! எம் வாழ்வுப் பாதையில் நாங்கள் காணும் தடைகளைக் கண்டு துவண்டு விடாமல் , மனம் சோர்ந்து போகாமல், தொடர்ந்து எம்வாழ்வை உமக்கு உகந்த விதத்தில் வாழ, உமது அருளைத் தாரும்.ஆமென்.

## 8ம் ஸ்தலம்

### எருசலேம் பெண்களுக்கு இயேசு ஆறுதல் கூறுகிறார்.

இயேசுவைப் பல பெண்கள் பின்தொடர்ந்தனர். அவரது போதனைகளையும் புதுமைகளையும் கண்டு வியந்தனர். கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர். குறிப்பாக இயேசு கைது செய்யப்பட்டு, சிலுவையில் அறைந்து கொல்லப்பட செல்லப்பட்டதைப் பார்த்து, சொல்லொணாத் துயரில் ஆழ்ந்தனர். இயேசுவின் மீது கொண்டிருந்த அன்பை தங்கள் கண்ணீர் வழி வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் தேம்பித் தேம்பி அழுதுகொண்டு வருவதைப் பார்த்து, இயேசு ஆறுதல் கூறுகிறார். ‘‘எனக்காக அழவேண்டாம். உங்கள் பாவங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்’’ என்கிறார். துன்புறும் வேளையிலும் பிறருக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுகிறார் இயேசு.

அன்பானவர்களே! தவக்காலம், புனிதவாரம் என்றவுடன் இயேசுவின் பாடுகளை நினைத்து வருத்தப்படுகிறோம், அழுகிறோம். ஆனால் எதற்காக இயேசு பாடுபட்டார், இறந்தார் என்பதை மறந்து விடுகிறோம். இயேசுவுக்காக வருத்தப்படுவதை அழுவதை நிறுத்திவிட்டு, நம் பாவவாழ்வை உற்றுநோக்கி, மாற்றத்தைக் கொணர்ந்து, மீட்பை முழுமையாக ஏற்றுக்கொள்ளவும், பிறரிடம் ஆறுதல் எதிர்பார்த்து காத்திராமல், பிறருக்கு ஆறுதல் தருபவர்களாக மாறிடவும், இயேசு இந்த ஸ்தலத்தின்வழி நம்மை அழைக்கின்றார்.

**செபம்**

வேதனையிலும் பிறருக்கு ஆறுதல் சொன்ன இயேசுவே! உம்மீது நாங்கள் வைத்திருக்கும் அன்பை தூய வாழ்வு வாழ்வதன் மூலம் வெளிப்படுத்தவும், பிறர்மீது கொண்டிருக்கும் அன்பை, ஆறுதல் மொழி கூறுவதன் வழி வெளிப்படுத்தவும், எமக்கு உமது அருளை தாரும்.ஆமென்.

## 9ம் ஸ்தலம்

## இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகிறார்.

மீண்டும் இயேசு வலுவிழக்க, கால்கள் தடுமாற, தள்ளாடி தரையில் மூன்றாவது முறையாக கீழே விழுகிறார். பிறர் உதவியை நாடவில்லை… மனம் தளர்ந்தும் போகவும் இல்லை... தன்னம்பிக்கையோடு எழுகிறார்… தன்னுடைய இந்த நிலைக்கு.... கடவுளையும் நிந்திக்கவில்லை… பிறரையும் பழித்துரைக்கவில்லை..... “இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றியே ஆகவேண்டும்” என்கிற தணியாத தாகத்தோடு, கல்வாரி மலையை கண்முன் கொண்டு, தன் சிலுவைப் பயணத்தைத் தொடர்ந்தார் இயேசு.

அன்புச் சகோதரமே.. நாம் நம்முடைய வாழ்க்கையில், வீழ்ந்தவர்கள் வீழ்ந்தே கிடக்கவேண்டும். பாவிகள், கெட்டவர்கள் எப்பொழுதுமே தீயவர்களாகத்தான் இருப்பார்கள் என்று நினைக்கின்றோம். திருந்துவதற்கும் வாய்ப்பும் தருவதில்லை. திருந்தி நல்லவர்களாக வாழ்ந்தாலும், அதை ஏற்றுக்கொள்வதுமில்லை. பலவிதமான சுமைகளால் எத்தனையோபேர் வாழ்க்கையில் வீழ்ந்தே கிடப்பதைப் பார்க்கின்றோம். இவர்களின் சுமைகளைக் குறைத்து, வாழ்வில் எழுந்து நடக்கச் செய்வது, கிறீஸ்தவர்களாகிய நம் கடமை அல்லவா? சிந்திப்போம்.

**செபம்**

வீழ்ந்து கிடப்போரின் நம்பிக்கையின் நட்சத்திரமான இயேசுவே! நாங்கள் விழும்போது எழுந்து நடக்கவும், வீழ்ந்து கிடக்கும் பலரைத் தூக்கிவிட்டு, தங்கள் இலக்கை நோக்கி பயணிக்க உதவிய இறைவா! உமது அருளை எங்கள் அனைவருக்கும் தாரும்.ஆமென்.

## 10ம் ஸ்தலம்

## இயேசுவின் ஆடைகளை களைகிறார்கள்.

இயேசுவைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி அவமானப்படுத்தியது… கற்றூணில் கட்டி அடித்து, தலையில் முள்முடி வைத்து அழுத்தியது… பாரமான சிலுவையை சுமக்கச் செய்தது… அவரது முகத்தில் காறித் துப்பியது… வழி நெடுகிலும் சாட்டையால் அடித்தது போதாது என்று சொல்லி, உடலோடு கூட ஒட்டியிருந்த அவரது ஆடையை ஈவு இரக்கமின்றி, மனித நேயமின்றி, உரித்து எடுக்கின்றார்கள் கல்நெஞ்சக்காரர்கள். இறைமகன் இயேசுவை கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் முன், அதுவும் தன் தாயின் முன், தன்னைப் பின்பற்றிய சீடர்கள், சீடத்திகள் முன், நிர்வாணமாக்குவது எவ்வளவு வேதனைக்குரியதாய இயேசுவுக்கு இருந்திருக்கும்.

இன்றும் நாம் வாழும் சமுதாயத்தில், இத்தகைய அவமானங்களும் கொடுமைகளும் பலருக்கு இழைக்கப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். கேள்விப்பட்டிருக்கின்றோம். எத்தனையோ ஏழைக் குழந்தைகள், ஏழை மனிதர்கள் அரை நிர்வாணத்தோடு வாழவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இத்தகையோர் நாம் அன்றாடம் காணும் இயேசுக்கள். இவர்களைக் கண்டு கொள்ளாதபோது, நாம் இயேசுவையே புறக்கணிக்கின்றோம். நம்மிடம் உள்ளதை பிறரோடு பகிர்வதன் வழி மனித நேயம் காண்போம்.

**செபம்**

எம்மை மீட்க ஆடைகளையும் இழந்த இயேசுவே! ஆடையின்றி தவிக்கும் மனிதரை ஏளனமாகப் பார்த்ததற்காக மனம் வருந்துகிறோம். இறைச் சாயலிலே படைக்கப்பட்டிருக்கும் எல்லா மனிதரையும், மதிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் உமது அருளை எமக்குத் தாரும். ஆமென்.

## 11ம் ஸ்தலம்

## இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்.

நோயாளிகளை தொட்டுக் குணப்படுத்திய கரங்களை… நகர நகரமாய் மக்களைத் தேடிச் சென்று இறைவார்த்தையைப் போதித்து, புதுமைகள் பல புரிந்த இயேசுவின் பாதங்களை, ஆணிகளைக் கொண்டு சிலுவையில் அறைகிறார்கள். விண்ணுக்கும், மண்ணுக்கும் இடையே மூன்று ஆணிகளில் சிலுவையில் தொங்குகிறார் இயேசு. சிலுவையில் அறைந்து விட்டோம், இயேசு துவங்கிய இறையாட்சிப்பணிக்கு ஒரு முடிவு கட்டிவிட்டோம், இனி நம்மை எதிர்க்க, மக்களை எமக்கு எதிராகத் திரட்ட ஒருவரும் இல்லை என்கின்ற நினைப்பு ரோமையாளர்களுக்கு. ஆனால் கள்வர்களுக்கு, கொடியவர்களுக்கு தண்டனையாகக் கொடுக்கப்பட்ட அவமானமான சிலுவையை, மீட்பின் சின்னமாக, வாழ்வில் சின்னமாக, நம்பிக்கையின் சின்னமாக மாற்றுகிறார் இயேசு.

அன்புச் சகோதர சகோதரிகளே! நாமும் நல்லவர்களைப் பார்த்து, நல்லது செய்பவர்களைப் பார்த்து பொறாமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் நம் வாழ்வுக்கு சவாலாக, தடையாக இருப்பவர்கள் என்றெண்ணி, முடிவு கட்டி விடவும் பலமுறை முயற்சித்திருக்கிறோம். எதற்காக இயேசு சிலுவையில் அறையப்பட்டார் என்பதை மறந்து, தொடர்ந்து பாவிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சிலுவையில் தொங்கும் இயேசுவை உற்று நோக்கி, மனமாறியவர்கள் யார்.....நாம் மனம் மாறப் போவது எப்போது.....?.?

### செபம்

வெறும் தண்டனையாக இருந்த சிலுவையை, மீட்பளிக்கும் சின்னமாக மாற்றிய எம் இயேசுவே! நாங்கள் ஒவ்வொரு முறையும் உண்மையை, நீதியை, உம் அன்புக் கட்டளைகளை கடைப்பிடிக்காதபோது, உம்மை சிலுவையில் அறைகிறோம் என்பதை உணர்ந்து, நற்செய்தி மதிப்பீடுகளின்படி வாழ வரம் தாரும். ஆமென்.

## 12ம் ஸ்தலம்

## இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார்.

தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு எதுவும் இல்லை என்று சொன்ன இயேசு, இதோ நமக்காக சிலுவையில் உயிர் விடுகிறார். ஆரம்பத்தில் சிலுவைச் சாவை ஒரு துன்பமாக நினைத்து, அதனை நீக்குமாறு இறைவனிடம் வேண்டினாலும், இறைவனின் திருவுளத்தை அறிகிறார். சிலுவைச் சாவை ஏற்கிறார். இறைவன் தனக்கு தந்த பணியை செவ்வனே செய்து முடித்து, எல்லாம் நிறைவேறிற்று என்று சொல்லி, தன் ஆவியை தன் தந்தையிடம் ஒப்படைக்கிறார்.

அன்புச் சகோதர சகோதரிகளே! இயேசுவின் சிலுவை மரணம் உலகையே உலுக்கிய ஓர் சம்பவம். சிலுவையே நம் வாழ்வில் வேண்டாம் என்கிறோம். இலக்குகளை அடைய பல நேரங்களில் குறுக்கு வழிகளையே தெரிவு செய்கிறோம். பிறர் பொருட்டு எதையும் இழக்க நாம் தயாராக இல்லை. எந்த சிரமங்களையும் பிறர் பொருட்டு ஏற்றுக்கொள்ளவும், நாம் தயாராக இல்லை. இயேசுவின் சிலுவை மரணம், ஓர் இறையன்பின், பிறரன்பின் வெளிப்பாடு. இயேசுவின் சீடர்களாக இருப்பதில் பெருமை கொள்ளும் நாம், அவரது இறையரசு கனவை நனவாக்க, முழுமையான விடுதலையை நம் சகோதர, சகோதரிகள் பெற, நாம் எதை இழக்கப் போகிறோம்? சிந்திப்போம்.

**செபம்**

பாவிகளாகிய எங்களை மீட்க, சிலுவை மரணம் ஏற்றுக் கொண்ட இயேசுவே! நீர் சிந்திய இரத்தத்தின் மதிப்பை உணர்ந்து, மனந்திரும்பி வருவதன் வழி, நாங்களும் மீட்படைய உமது அருளை எங்கள் அனைவருக்கும் தாரும்.ஆமென்.

## 13ம் ஸ்தலம்

### அன்னை மரியாள் மடியில் இயேசுவின் உடல் கிடத்தப்படுகிறது.

யூத பெண்மணியான மரியாள் மெசியாவுக்காக ஆவலோடு காத்திருந்தவள்... அந்த மெசியா தன்வழியாக இவ்வுலகிற்கு வரப்போகிறார் என்ற செய்தி கேட்டு மகிழ்ந்தவள்... இறைவனுடைய மீட்புத் திட்டத்திற்கு ஆகட்டும் என்று சொல்லி தன்னை முழுதும் கொடுத்தவள்... இயேசுவைப் பெற்றெடுத்து, கடவுளுக்கு உகந்த பிள்ளையாய் வளர்த்தவள்... ஜெருசலேம் ஆலயத்தில் காணாமல் போனபோது, பதறிப்போனவள்... இயேசுவுக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்று ஒரு சிலர் சொல்வதைக் கேட்டு, மகனைத் தேடிச் சென்றவள்... தன் மகனுக்கே தன்னை சீடத்தி ஆக்கிக் கொண்டவள்... தன் மகனுடைய பாடுகளிலே பங்கெடுத்து, இதோ இறந்து போன தன் மகனின் உடலை தன் மடியிலே சுமக்கும் வேளையில் எவ்வளவு வேதனையையும், துன்பத்தையும் அடைந்திருப்பாள் என்று யோசிப்போம். பொதுவாக பிள்ளைகள் பெற்றோருடைய அடக்கச் சடங்கிலே பங்கெடுப்பது வழக்கம். ஆனால் பிள்ளைகள் இறப்பை பெற்றோர் காண்பதும், அடக்கச் சடங்கில் பங்கெடுப்பதும் நிச்சயமாக தாங்கிக் கொள்ள முடியாத வேதனையாகவே இருந்திருக்கும். இருப்பினும் இதுவும் இறைவனின் திட்டம் என ஏற்றுக்கொள்கிறாள் மரியாள்.

அன்புச் சகோதர, சகோதரிகளே! நமது அன்றாட குடும்ப வாழ்வில், நாம் பெற்றெடுத்த பிள்ளைகள் நம்மை மதிக்க வேண்டும்... நம் சொல், பேச்சுக் கேட்கவேண்டும்... நன்கு படிக்கவேண்டும்... ஒழுக்கமுள்ளோராய் இருக்கவேண்டும்... வாழ்க்கையில் உயர்ந்து நிற்கவேண்டும்... எதிர்காலத்தில் நம்மை கண்கலங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும் - என்கிற திட்டங்களை வைத்து அவர்களை வளர்க்கிறோம். நம் பேச்சை பிள்ளைகள் கேட்காதபோது, தாங்கள் நினைத்ததைச் செய்யும்போது, தங்கள் வாழ்வை தாங்கள் நினைத்ததுபோல் அமைத்துக் கொள்ளும்போது, நம்மை மதியாதபோது, நம்மீது கொஞசம்கூட அக்கறை இல்லாமல் வாழும்போது, நம்மை எதிர்த்து பேசும்போது எவ்வளவு கஸ்டங்களை அனுபவிக்கிறோம். மரியாளோ எதையும் எதிர்பாராது, தன் பிள்ளையை வளர்த்து இறைவனுக்கும், அவர் தம் மக்களுக்கும் அவரை அர்ப்பணித்ததுபோல, நாமும் செயலபட முயல்வோம்.

**செபம்**

எங்கள் மீட்புக்காய் உம் மகனையும் கையளித்த வியாகுல மரியே! உம்மைப்போன்று சுயநலம் இல்லாத தாய்மார், தந்தைமார்களாய் இருக்க உமது அருள் தாரும்.ஆமென்.

## 14ம் ஸ்தலம்

## இயேசுவின் உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது.

"கோதுமை மணி மண்ணில் இருந்து மடியும்வரை அது அப்படியே இருக்கும், மடிந்தால்தான் மிகுந்த பலனளிக்கும்" என்று சொன்ன இயேசு, தன் உயிரை நமக்கு கொடுத்ததோடு நிறுத்திக்கொள்ளாமல், தன் உடலையும் நம் மீட்புக்காக இந்த மண்ணிலே விதைக்கிறார். "உடலை கொல்வோருக்காக அஞ்ச வேண்டாம். ஆன்மாவை அழிப்பவர்களுக்காக அஞ்சுங்கள்" என்றவர், தன் தன் உடலை இம் மண்ணுக்காக கையளிக்கிறார். இயேசுவைக் கொன்றவர்கள் அவரது உடலை மாத்திரம் அல்ல, அவர் போதித்த இறையரசு மதிப்பீடுகளையும் சேர்த்துத்தான் புதைக்கிறார்கள். இலட்சியவாதியான இயேசு இங்கே புதைக்கப்படவில்லை. மாறாக விதைக்கப்படுகிறார். எனவே அவர் தொடர்ந்து வாழ்வார். வாழ்வு தருவார்.

அன்புச் சகோதர, சகோதரிகளே! நாம் நமது அன்றாட வாழ்வில் துன்பம் வேண்டாம் என்கிறோம். சாவைக் கண்டு அஞ்சுகிறோம். இவை இரண்டையும் நம் வாழ்வில் தவிர்க்கும் பொருட்டு, எதையும் இழக்க நாம் தயாராக இருக்கிறோம். இலட்சியங்களை, மதிப்பீடுகளை மாத்திரம் அல்ல, விசுவாசத்தை இழந்து நிற்போரும் உண்டு. இயேசு, அவரைத் தொடர்ந்து அப்போஸ்தலர்கள், மறைசாட்சிகள் சாவை ஏற்றுக் கொண்ட விதம், நமக்கு மிகச் சிறந்த பாடமாக இருக்க வேண்டும். எவ்வளவு காலம் இவ்வுலகில் வாழப் போகிறோம் என்று எண்ணாமல், எப்படி வாழ்கிறோம் என்பதற்கு முக்கியத்துவம் தந்து, சாவு வழி நிலையான வாழ்வை சொந்தமாக்கி கொள்ள முயற்சிகளை மேற்கொள்வோம்.

### செபம்

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான் என்று கூறிய அன்பு இயேசுவே! இந்த உமது வார்த்தையிலே நாங்கள் நம்பிக்கை கொண்டு, எம் வாழ்வில் வரும் துன்பங்களையும், இறப்பையும் இன்முகத்துடன் ஏற்றுக் கொள்ள அருள் தாரும்.ஆமென்.